இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஹைத்திக்கான வேண்டுகோளைத் தொடர்ந்து, நேபாளம் மற்றும் திபெத் பகுதிகளில் ஏற்பட்ட பேரழிவு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தாம் ஜெபிப்பதாகத் திருத்தந்தை உறுதியளித்தார். உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள், காணாமல் போனவர்கள், அவர்தம் குடும்பத்தினர் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக ஜெபிக்குமாறு இறைமக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஹைத்தியில் பிணைக்கைதிகளை விடுவிக்கவும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாளத்திற்கு உதவவும் வேண்டுகோள்



ஞாயிற்றுக்கிழமை கஸ்தெல் கந்தோல்போ (Castel Gandolfo) நகரிலிருந்து மதிய 'மூவேளை ஜெபத்தை' (Angelus) முன்னெடுத்த பிறகு, திருத்தந்தை பதினான்காம் லியோ (Pope Leo XIV) ஹைத்தியில் அண்மையில் நடந்த கொடூரமான படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்தார். மேலும், அங்கு கடத்தப்பட்டப் பிணைக்கைதிகளை உடனடியாக விடுவிக்கவும், நூற்றுக்கணக்கான மக்களைப் பலிகொண்டு, ஆயிரக்கணக்கானோரைக் காணாமல் போகச் செய்துள்ள பேரழிவு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேபாள நாட்டிற்கு உடனடி உதவிகள் கிடைக்கவும் அவசர வேண்டுகோள் விடுத்தார்.

"ஹைத்தியின் கென்ஸ்காஃப் (Kenscoff) பகுதியில் எண்ணற்ற மனிதர்கள் தங்கள் உயிரை இழந்துள்ளதும், பலர் கடத்தப்பட்டுள்ளதும் குறித்த கொடூரமான செய்திகள் வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எனது ஜெபத்தின் வழியே எனது நெருக்கத்தை வெளிப்படுத்துவதோடு, பிணைக்கைதிகள் அனைவரும் தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், அனைத்து வகையான வன்முறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவும் பொறுப்பில் உள்ள அனைவரும் உண்மையான அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்று என் இதயத்தின் ஆழத்திலிருந்து வேண்டுகோள் விடுக்கிறேன்." என்றார் திருத்தந்தை.

நேபாளம் மற்றும் திபெத் மக்களின் துயரத்தைப் போக்கக் கோரிக்கை

ஹைத்திக்கான வேண்டுகோளைத் தொடர்ந்து, நேபாளம் மற்றும் திபெத் பகுதிகளில் ஏற்பட்ட பேரழிவு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகத் தாம் ஜெபிப்பதாகத் திருத்தந்தை உறுதியளித்தார். உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள், காணாமல் போனவர்கள், அவர்தம் குடும்பத்தினர் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக ஜெபிக்குமாறு இறைமக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

700-க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு; ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்வு

நேபாளத்திற்கான திருத்தந்தையின் தூதரகம் (Apostolic Nunciature) வழிகாட்டுதலின்படி, போராயர் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் 'காரித்தாஸ் நேபாளம்' அமைப்பின் நிவாரணப் பணிகளுக்குத் திருத்தந்தையின் உதவி பங்களிக்கும். பேரழிவு ஏற்பட்ட முதல் சில மணிநேரங்களிலேயே தொடங்கிய இந்நிகழ்வில், அனைத்தையும் இழந்த மக்களுக்கு உணவு, அடிப்படைத் தேவைகள் மற்றும் தங்குமிடம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வரும் நிலையில், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நேபாளம் மற்றும் திபெத் ஆகிய இரு பகுதிகளிலும் சேர்த்து 1000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும், குறைந்தபட்சம் 4000 பேரைக் காணவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களின் ஆன்மாக்களை "எல்லாம் வல்ல இறைவனின் இரக்கத்திற்கு" ஒப்படைத்ததோடு, துயருறும் குடும்பங்களுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்தார்.மேலும்,பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது ஆன்மீக நெருக்கத்தை உறுதியளித்ததுடன், தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அவசரகாலப் பணியாளர்களுக்காகவும் ஜெபித்தார் திருத்தந்தை.

தமிழாக்கம் ஹெரால்டு

மலேசியா மேய்ப்புப்பணி மாநாடு 2026

சிபு சரவாக்கில் நடைப்பெற்ற மலேசிய மேய்ப்புப்பணி மாநாடு 2026 (MPC2026) என்பது மலேசியாவில் உள்ள கத்தோலிக்க திருஅவைக்கு மிகவும் முக்கியமான ஒரு தேசிய அளவிலான நிகழ்வாகும். இது மலேசிய கத்தோலிக்க திருஅவை இன்று எங்கு இருக்கிறது, எதிர்காலத்தில் எங்கு செல்ல வேண்டும், கிறிஸ்துவின் பணியை எவ்வாறு இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்பதை ஒன்றாகச் சிந்தித்து, செபித்து, பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலைத் தேடும் ஒரு முக்கியமான ஆன்மீகப் பயணமாகும். இன்றைய காலத்தில் நமது கத்தோலிக்க திருஅவை எவ்வாறு மக்களுடன் இணைந்து நடக்க வேண்டும்? கிறிஸ்துவின் அன்பையும் நற்செய்தியையும் எவ்வாறு உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டும்? என்பதே இந்த மாநாட்டின் முக்கியமான கேள்வியாகும்.

மலேசியாவில் உள்ள கத்தோலிக்க திருஅவை பல்வேறு கலாச்சாரங்கள், மொழிகள் மற்றும் சமூகங்களை உள்ளடக்கியது. மலேசியாவின் ஒன்பது கத்தோலிக்க மறைமாவட்டங்களும் (Dioceses) இந்தப் பயணத்தில் ஒன்றிணைந்தன. இது வரையில் தீபகற்ப மலேசியா கிழக்கு மலேசியா என தனித்தனியே மாநாடுகளை நடத்திவந்த வேளையில், முதல் முறையாக மேற்கு கிழக்கு மலேசிய மறைமாவட்டங்கள் ஒன்றினைகின்றன. தீபகற்ப மலேசிய திருஅவையில் சபா சரவாக் மக்களின் பங்கெடுப்பு நாளுக்குநாள் அதிகரித்துள்ளதையடுத்து இந்த மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது. மூவினம் குறித்து அதி கவனம் பெற்றிருந்த முந்தைய மாநாடுகளைக் காட்டிலும் இன்று சபா சரவாக் பூர்வக்குடிகள் உள்ளடக்கிய மாநாடு பல எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறது என அருட்பணி சிரில் மந்நாயகம் தெரிவித்தார்.

அருட்பணியாளர்கள், ஆயரகள் ஆகியோருடன் துறவியர், பொதுநிலையினர் (Laity), இளைஞர்கள், பல்வேறு திருஅவை இயக்கங்கள் மற்றும் பணிக்குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர். இதன் மூலம் சாதாரண பங்கு மக்களின் குரலும் திருஅவையின் எதிர்காலத்தைப் பற்றியும் கேட்கப்பட்டது.

MPC2026-ன் மூன்று முக்கியமான அழைப்புகள்

"Communion – Participation – Mission"

1. Communion – ஒன்றிப்பில் கொண்டாடுவோம்

நமது மொழி, கலாச்சாரம், இனம், பகுதி வேறுபட்டிருந்தாலும் நாம் ஒரே திருஅவை. நமது வேறுபாடுகளைப் பிரிவாக அல்ல, இறைவன் கொடுத்த அழகான பல்வகைத் தன்மையாக பார்க்க வேண்டும். கிறிஸ்துவின் ஒரே உடலில் பங்கு கொண்டிருக்கிறோம்.

2. Participation – பங்கேற்பின் ஆவியுடன் செவிமடுப்போம்

திருஅவையில், பங்கு மக்களின் பங்கேற்பு மிகவும் முக்கியமானது. திருப்பலியில் கலந்து கொள்வது மட்டும் அல்ல. நமது திறமைகள், நேரம், அனுபவம், அறிவு, ஆற்றல் ஆகியவற்றை இறைபணிக்காகப் பயன்படுத்த வேண்டும். திருஅவை எனக்காக என்ன செய்கிறது? என்ற கேள்வியோடு நிறுத்தாமல், திருஅவைக்காக நான் என்ன செய்ய முடியும்? என்ற கேள்வியையும் நாம் கேட்க வேண்டும்.

3. Mission – இறைபணியில் ஒன்றாக நடப்போம்

நாம் ஆலயத்திற்குள் மட்டுமே கிறிஸ்தவர்களாக இருக்கக்கூடாது. குடும்பத்தில், வேலைத்தளத்தில், பள்ளி கல்லூரிகளில், சமூகத்தில், அண்டை வீட்டாரிடையே, ஏழைகள் மற்றும் தேவையுள்ளவர்களிடையே கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த வேண்டும். நாம் அனைவரும் நற்செய்தியின் தூதர்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

இன்று திருஅவை எதிர்கொள்ளும் சவால்கள்!

MPC2026 நமது திருஅவை எதிர்கொள்ளும் பல முக்கியமான கேள்விகளைப் பற்றியும் சிந்திக்கிறது.

- ஏன் சில இளைஞர்கள் திருஅவையிலிருந்து விலகுகிறார்கள்?
- இளைஞர்களை எவ்வாறு திருஅவையில் அதிகமாக ஈடுபடுத்துவது?
- கத்தோலிக்க குடும்பங்களை எவ்வாறு வலுப்படுத்துவது?
- திருப்பலி, அருட்சாதன கொண்டாட்டங்களில் பங்கேற்பதைத் தாண்டி, விசுவாசத்தை வாழ்க்கையாக எவ்வாறு வாழ்வது?
- திருஅவையிலிருந்து விலகியவர்களை மீண்டும் எவ்வாறு அன்புடன் அணுகுவது?
- ஏழைகள் மற்றும் தேவையுள்ளவர்களுக்கு நாம் எவ்வாறு சிறப்பாகச் சேவை செய்வது?
- பொதுநிலையினரின் (Laity) பங்களிப்பை எவ்வாறு அதிகரிப்பது?
- இன்றைய டிஜிட்டல் உலகில் நற்செய்தியை எவ்வாறு அறிவிப்பது?
- நமது பங்குகளை இன்னும் அன்பான, வரவேற்கும் மற்றும் இறைபணி மிக்க சமூகங்களாக எவ்வாறு மாற்றுவது?
- மறக்கப்பட்டவர்கள், மறைக்கப்பட்டவர்களை எவ்வாறு அன்புடனும் பரிவுடனும் கிறிஸ்துவுக்குள் நடத்துவது?

தயாரிப்புப் பயணத்தில் குறிப்பிடப்படும் நான்கு முக்கியமான திசைகள்:

1. மக்களின் குரலாக மக்களின் துயரம், தேவைகள் மற்றும் நம்பிக்கைகளை திருஅவை கேட்க வேண்டும்.
2. இரக்கத்தின் மூலம் மக்களை அணுகும் திருஅவை ஏழைகள், தனிமையில் இருப்பவர்கள், துன்பப்படுபவர்கள் மற்றும் உதவி தேவைப்படுபவர்களிடம் கிறிஸ்துவின் இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.
3. நிறைவான வாழ்வை அறிவிக்கும் திருஅவை இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி ஒவ்வொருவருக்கும் நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் வாழ்வின் அர்த்தத்தை வழங்குகிறது என்பதை அறிவிக்க வேண்டும்.
4. பரிசுத்தத்தில் வளருகின்ற திருஅவை செபம், திருப்பலி, திருவருட்சாதனங்கள், இறைவார்த்தை மற்றும் அன்பின் இரக்கத்தின் செயல்கள் மூலம் நாம் அனைவரும் பரிசுத்தத்தில் வளர உதவ வேண்டும்.

இந்த மாநாட்டில் எடுக்கப்படும் திசைகள் எதிர்காலத்தில் நமது பங்குகள், BEC சமூகங்கள், குடும்பங்கள், இளைஞர் பணிகள், குழந்தைகள் மற்றும் மதக்கல்வி, திருஅவை இயக்கங்கள், சமூகப்பணி மற்றும் இறைபணி போன்ற பல துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இது நமது குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான திருஅவை எப்படி இருக்கும் என்பதையும் சிந்திக்கக்கூடிய ஒரு முக்கியமான பயணம்.

நமது திருஅவை அடுத்த தலைமுறைக்காக எப்படிப்பட்ட திருஅவையாக இருக்க வேண்டும்? இதற்கான பதிலை ஆயர்கள், குருக்கள் மட்டும் அளிக்க முடியாது. நாம் அனைவரும் சேர்ந்து தேட வேண்டிய பதில் இது.

பரிசுத்த ஆவியே, வாரும்!

எங்கள் திருஅவையை வழிநடத்தும்.

எங்களை ஒன்றிணைத்து,

உமது இறைபணியில் உண்மையான சாட்சிகளாக மாற்றும். ஆமென்.

பெர்சியுஸ் ஜேம்ஸ்

நம்பிக்கையில் நிலைத்திருத்தல்

கடந்த ஆகஸ்ட்டு 22ஆம் நாள் மலாக்காவிலுள்ள புனித பிரான்சிஸ் சேவியர் பங்கில் 28 இளைஞர்கள் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனத்தைப் பெற்றனர்.

நமது இளைஞர்களின் விசுவாசப் பயணத்தில் அமைந்த இந்தச் புனிதமான தருணத்தைக் காணப் பங்குமக்கள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் என ஏராளமானோர் ஆலயம் முழுவதும் திரண்டு வந்து மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டனர்.

உறுதிப்பூசுதல் பெற்ற 28 பேரில், தமிழ் மொழிப்பிரிவைச் சேர்ந்த 7 இளைஞர்களும், அலோர் காஜார் (Alor Gajah) குழுவைச் சேர்ந்த 2 இளைஞர்களும் அடங்குவர்.

மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு பர்னார்ட் பால் (Rt. Rev. Bishop Bernard Paul) அவர்கள் தலைமையில் இந்தத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. தேவதாசன் மதல முத்து மற்றும் அருட்பணி.

பவுலினோ மிராண்டா ஆகியோர் இணைந்து திருப்பலியைச் சிறப்பித்தனர்.

ஆயர் பர்னார்ட் பால் அவர்கள் வழங்கிய மறைவுரையில், திருவிவிலிய இறைவார்த்தைகளை இளைஞர்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைத்துப் பேசினார்.

கடவுள் நம்மிடம் எவ்வாறு பேசுகிறார் என்பதையும், நாம் யாராக வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் சிந்தித்துப் பார்க்க அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். கடவுள் நம்மிடம் பேசுவதற்குப் பல அடையாளங்களைப் பயன்படுத்துகிறார் என்பதைக் கூறித் தமது மறையுரையைத் தொடங்கினார்.

உறுதிப்பூசுதல் பெற்ற இளைஞர்களிடம் பேசிய ஆயர் பர்னார்ட், "நம்முடைய உண்மையான அடையாளத்தைக் கடவுள் வழியாக மட்டுமே கண்டறிய முடியும்" என்று நினைவூட்டினார்.


கடவுளை உண்மையாக அறிய வேண்டுமெனில், பிறர் சொல்வதைக் கேட்டு மட்டும் அறியாமல், அவரை சொந்த வாழ்க்கையில் நேரில் அனுபவித்து உணர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தூய ஆவியாரின் கொடைகளைப் பெற்ற நமது இளைஞர்கள், இப்போது கடவுளின் அன்பிற்குரிய பிள்ளைகள் என்ற உறுதியோடும், அவரைத் தனிப்பட்ட முறையில் அனுபவித்து உணரும் நோக்கத்தோடும் அனுப்பப்படுகிறார்கள்.

அருட்பணி மோசஸ் இராயப்பன், பங்குத்தந்தை,
புனித பிரான்சிஸ் சேவியர் மலாக்கா

இறை நம்பிக்கை எவ்வாறு உருவாகிறது

கோலாலம்பூர் மறைக்கல்வி மறைமாவட்டம் ஆணைய ஏற்பாட்டில் ஓராண்டு மறைக்கல்வி சான்றிதழ் உருவாக்க பயிற்சி (Certificate in Catechism), பிப்ரவரி 2026 தொடங்கி நவம்பர் 2026 வரை ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட சனிக்கிழமைகளில், கோலாலம்பூர் புனித அந்தோணியார் ஆலயத்தில் உள்ள 'Cahayasuara' என்ற இடத்தில் நடைபெற்று வருகிறது.



'இறை நம்பிக்கை எவ்வாறு உருவாகிறது' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த ஐந்தாம் அமர்வு, அடிப்படை நம்பிக்கையானது எவ்வாறு திருஅவையில் ஒரு நபர் வருவதற்கு முன்பாகவே தொடங்குகிறது என்பதை மிக விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அடிப்படை நம்பிக்கையானது நாம் பிறந்த பொழுதிலிருந்தே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நம் பெற்றோர் நமக்கு எதை போதித்து வளர்க்கின்றனர் என்பதை பொறுத்தே சீராக அமையும். அப்படி முறைப்படி வளர்க்கப்படும் அடிப்படை நம்பிக்கையை ஒட்டியே நம் இறை நம்பிக்கை இருக்கும் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

முனைவர் ஸ்டீவன் எடுத்துரைத்ததில் இறை நம்பிக்கையானது நம் வாழ்வில் வரும் பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளவும், அனுகவும் முறையான ஞானத்தை அளிக்கிறது. இதன் மூலம் நாம் கடவுள் மீது நம்பிக்கையில்லாத ஒரு தருணத்திற்கு தள்ளப்பட மாட்டோம். அதை எதிர்கொள்ளும்போது கடவுள் மீது நம்பிக்கை மேலும் ஆழமாகும் என்பதை நான் உணர்வுபூர்வமாக அறிந்தேன்.

நம்பிக்கை வளர்வதற்கு நம்பிக்கை வளர்ச்சி குறித்த கோட்பாடுகளும் உள்ளன. 0-2 வயது உடையோரை வேறுப்படுத்தப்பட்ட நம்பிக்கை நிலை என்போம். 2-6/7 வரையிலான வயது உடையோரை உள்ளுணர்வு திட்டமான நம்பிக்கை என்போம். 6/7-12/13 வரையிலான வயது உடையோரை புராண-பக்கத்திலுள்ள நம்பிக்கை கொண்டவர்கள் என்போம். அதை தொடர்ந்து செயற்கை மரபொழுங்கு நம்பிக்கை என்பது 12/13-17/18 வயது வரை உள்ளவர்களுக்கு இருக்கும். இது பதின்ம வயதுடையவர்களுக்கு இருப்பது. அதை தொடர்ந்து 18-30 வரை தனிநபர் நம்பிக்கையாகவும் 30-45 வரை இணைப்பு பிரதிபலிப்பு நம்பிக்கையாகவும் கருதப்படுகிறது. பின்பு 45 மேல் உள்ள நம்பிக்கையே உலகளாவியமாக்குதல் ஆகும்.

அதுமட்டுமின்றி, மறைக்கல்வியின் முதன்மைப் பிரதிநிதிகளாகப் பெற்றோர்கள் செயல்படுவதன் முக்கியத்துவத்தை முனைவர் ஸ்டீவன் எடுத்துரைத்தார். பெற்றோர்கள் அவர்களுள் பரிமாறிக் கொள்ளும் அன்பும் பிள்ளைகளுடன் பகிரும் அன்பும் அவர்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கும். அதுவே அவர்களுக்கு குடும்ப மறைபோதகமாக விளங்கும். எனவே மறைபோதகமானது மற்ற எல்லா வகையிலான மறைபோதகங்களுக்கும் முந்திக்கொண்டு அவற்றுடன் இணைந்து அவற்றை வளப்படுத்துகிறது.

பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் ஏனெனில் கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு கல்வி கற்பிக்கும் பணி திருமண அருட்சாதனத்திலிருந்தே தொடங்குகிறது. இது தங்கள் பிள்ளைகளுக்கு முற்றிலும் கிறிஸ்தவக் கல்வியை வழங்குவதற்காக அவர்களை புனிதப்படுத்துகிறது என்பதே நான் இந்த அமர்வின் வழி கற்றுக்கொண்டேன்.

மேலும், ஒரு மறைபோதகராகிய நான், இளைஞர்கள் தங்கள் இறை நம்பிக்கையை எவ்வாறு உணர்ந்து கடைப்பிடிக்கிறார்கள் என்பதைப் பற்றியும், அவர்கள் வயது வந்தவர்களாக வளரும்போது, அவர்களுடைய இறை நம்பிக்கை பயணத்தை, வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடும் பயணத்தைத் தொடர எவ்வாறு உதவ முடியும் என்பதையும் இந்த அமர்வின் வழியாக அறிந்துகொண்டேன்.

யோனாஸ் த/பெ வின்சன்
திருக்குடும்ப தேவாலயம் காஜாங்



மன்னிப்பு நம்மைப் புனிதனாக்கும்

சீராக் 27:30-28:7, உரோமையர் 14:7-9, மத்தேயு 18:21-35

கடந்த வார ஞாயிறு நற்செய்தியில் இயேசு, நமது கிறிஸ்துவக் குடும்பங்களிலும் சமூகத்திலும் நிலவும் இருத் தரப்பு தகராற்றைத் தீர்த்துக் கொள்ளும் வழிவகைகளைப் பற்றி விளக்கினார். ஒரு தகராற்றை நியாயமான முறையில் தீர்த்துக் கொள்ள சம்பந்தப்பட்டவரிடம் நேரடியாக பேச வேண்டும். தவறினால், இரண்டு அல்லது மூன்று பேரை வைத்துப் பேச வேண்டும், தகராறு தீரவில்லை என்றால், திருஅவையிடம் கொண்டுச் செல்ல வேண்டும் என இயேசு கூறினார். அப்போதும் தீர்வு ஏற்படாவிட்டால், எதிராளியை விலக்கி வைத்துவிடு என்கிறார். ஆனால், இவ்வார ஞாயிறு நற்செய்தியில், எதிராளியை மன்னித்துக் கொண்டே இரு என இயேசு புதியப்பாடம் எடுக்கிறார். அதாவது, ஒருவரை மன்னிப்பதற்கு அளவுகோலோ, வரையறையோ இல்லை என்று சொல்கிறார் இயேசு.

கடவுளின் அன்பை வெளிப்படுத்துவது, மன்னிப்பு. இயேசு தமது பணி வாழ்வின் எல்லாக் கட்டத்திலும் மன்னிக்கும் பண்பை வெளிப்படுத்தி வந்திருக்கிறார். 'ஊதாரி மகன்' (லூக்.15:11-32) உவமையில் வரும் தந்தை இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. 'தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை' (லூக்.23:34) என்று சிலுவையில் தொங்கும் இயேசு சொன்ன வார்த்தை.

தப்பு செய்த சகோதரனை ஏழு முறை மன்னித்தால் போதுமா என பேதுரு கேட்கிறார் (மத்.18:21). ஏழு என்பது எபிரேய வழக்கத்தில் முழுமையைக் குறிக்கும். அதனால், ஏழு முறை மன்னிப்பது போதுமானதாக இருக்கும் என்ற எண்ணத்தில் பேதுரு இக்கேள்வி விடுக்கிறார். அதற்கு இயேசு, "ஏழுமுறை மட்டுமல்ல, ஏழுபது தடவை ஏழுமுறை" (மத்.18:22) அதாவது 490 முறை மன்னிக்க வேண்டும் எனக் கூறுவது, பேதுருக்கு மட்டுமல்ல நமக்கு பேரதிர்ச்சியாக இருக்கிறது.

மன்னிக்கும் பண்பை நம் வாழ்வில் கைகொள்ள வேண்டும் என்று இயேசு வலியுறுத்துவதற்கு காரணம், மன்னிப்பு இல்லாவிட்டால் நமது இதயத்தில் அன்பு மலராது; அமைதி பூக்காது. பூக்காடாக இருக்க வேண்டிய இதயம், வானம் பார்த்த பூமியாக வறண்டு விடும். இதனையே, இன்றைய முதல் வாசகமும் கூறுகிறது. 'உனக்கு அடுத்திருப்பவர் செய்த அநீதியை மன்னித்துவிடு; அவ்வாறெனில் நீ மன்றாடும் போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும்' (சீராக் 28:2). மன்னிப்பு என்றால் நிகழ்ந்த தவற்றைப் பொருட்படுத்தாமல் விடுவதல்ல, தனிநபர் செய்ததால் அப்படியே விட்டு விடுவதல்ல. அதை அப்படியே மறந்து விடுவதுமல்ல, தவறு செய்தவர் தொடர்ந்து தவறு செய்யட்டும் என விட்டு விடுவதுமல்ல. மன்னிப்பு என்றால் நம்மிடம் இருக்கும் கோபத்தை, விரோதத்தை கைவிடுவது. இருள் இல்லாத இடத்தில் ஒளி இருப்பது போல் கோபமும் விரோதமும் இல்லாத இடத்தில் அன்பும் அமைதியும் குடிகொள்ளும்.

இரக்கமும் அருளும் கொண்டவர்; நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவரான தந்தையாகியக் கடவுளைப்போல், மன்னிக்கும் பண்பு நம்மில் எளிதில் வந்து விடாது. ஏன் நட்டாற்றில் விட்டுச்சென்ற உடன்பிறந்தவர்களைகூட மன்னிக்க நமக்கு மனம் வராது. அவர்கள் மீது வன்மம்தான் அதிகரிக்கும். அவர்களை நமது வாழ்க்கையில் இருந்து ஒதுக்கி வைப்போம். நாம் செய்வது சரி என்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கும், உண்மைதான், ஆனால் ஒன்றை மறந்து விடக்கூடாது. "நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்" (உரோ.5:8). இந்தக் கடவுள் நம்மை மன்னித்துக் கொண்டே இருக்கிறார்.

அந்தோணி இன்னாசி சைபர்ஜெயா

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015